## நிகழும் சுபகிருது வருடம் மார்கழி மாதம் 15 ஆம் நாள் (30.12.2022) வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் முதல் நவம்பர் 2022ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண். : 442, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் முதல் நவம்பர் 2022ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண். : 443, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.3 :**

அரசாணை எண். 22 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் து
றை, நாள். 21.01.2011இன்படி நாமக்கல் நகராட்சி சுற்றியுள்ள நல்லிப்பாளையம், தும்மங்குறிச்சி, அய்யம்பாளையம், முதலைப்பட்டி, சின்னமுதலைப்பட்டி, கொசவம்பட்டி, கொண்டிசெட்டிபட்டி, பெரியப்பட்டி மற்றும் காவேட்டிப்பட்டி ஆகிய 9 கிராம ஊராட்சிகள் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஊராட்சிகள் மற்றும் பழைய நாமக்கல் நகரப்பகுதிகளில் உள்ள சர்வே எண்கள் வருவாய் துறை ஆவணங்களில் 1986ஆம் ஆண்டு வரை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு நாமக்கல் சர்வே எண்களில் இன்றுவரை திருத்தங்கள் செய்யப்படாமல் உள்ளதால், நாமக்கல் டவுன் வருவாய் கிராம புல எண்களுக்கு இணையாக நகரளவை புல எண்கள் வழங்கி நகரளவை செய்திட கோரி இயக்குநர், நில அளவை மற்றும் நில வரி திட்ட அலுவலர், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு மாவட்ட வருவாய் துறை மூலமாக கருத்துரு சமர்ப்பிக்க நகர்மன்ற துணை தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட, 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். : 444, தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண்.4 :**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23651/2013/டிஒ1, நாள்:18.10.2019 வாயிலாக நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான மோகனூர் தலைமை நீரேற்று நிலையம், அணியாபுரம் நீருந்து நிலையம், நகரில் உள்ள பிரதான நீரேற்று நிலையங்கள் மற்றும் பகிர்மான அமைப்புகளில் தனியார் மூலமாக தேவையான ஆட்களை கொண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள Principal Clearance மற்றும் Bid document அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான செலவினங்கள் பின்வருமாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஆண்டு | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான மோகனூர் தலைமை நீரேற்று நிலையம், அணியாபுரம் நீருந்து நிலையம், நகரில் உள்ள பிரதான நீரேற்று நிலையங்கள் மற்றும் பகிர்மான அமைப்புகளில் தனியார் மூலமாக தேவையான ஆட்களை கொண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் | முதலாம் ஆண்டு | 93.48 |
| | | இரண்டாம் ஆண்டு (5 சதவீதம் கூடுதல்) | 98.15 |
| | | மூன்றாம் ஆண்டு (5 சதவீதம் கூடுதல்) | 103.06 |

மேற்கண்ட செயல்முறைகள் அடிப்படையில் குடிநீர் விநியோகம் முதலாம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு 20.11.2019 அன்று ரூ.93.48 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் JP Construction, கணேசபுரம், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மானம் எண்.447, நாள். 21.11.2019 வாயிலாக ஏற்கப்பட்டு, 01.02.2020 முதல் 31.01.2023 வரை கடந்த மூன்று ஆண்டுகள் பணி திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

தற்போது ஒப்பந்த காலம் 31.01.2023 உடன் முடிவடையும் நிலையில் மேற்கண்ட ஒப்பந்ததாரர் JP Construction, கணேசபுரம், நாமக்கல் நிறுவனத்தின்மூலமாகவே தொடர்ந்து 01.02.2023 முதல் 31.01.2024 வரை

அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததராரர்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தராரர்கள் நியமிக்கும் காலம்வரை குடிநீர் விநியோக பராமரிப்பு பணிக்கான அனுமதியை நீட்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மூன்றாம் தொகுப்பு காலத்திற்கு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.103.06 இலட்சத்திற்குள்ளாவே பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: –**

1. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த காலத்தை JP Construction, கணேசபுரம், நாமக்கல் நிறுவனத்திற்கு ஒருவருட காலத்திற்கு **(01.02.2023** முதல் **31.01.2024** வரை**)** அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததராரர்கள் அமர்த்த ஊதியம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் புதியதாக ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் காலம்வரை நீட்டிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 556/2022/இ1)**

**தீர்மானம் எண். : 445, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள், மனித ஆய்வுக்குழிகள் மற்றும் கழிவுநீரேற்று நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து கழிவுநீர் சேகரிப்பு அமைப்புகளையும் ஒப்பந்தமுறையில் தனியார் மூலமாக பராமரிக்கும் பணியை மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**23656/2013/**டிஓ**1**, நாள்.**21.11.2017** வாயிலாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு **29.12.2017** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாக பராமரிப்பு பணிகள் **01.02.2018** முதல் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்களுக்குள்ளாக பணிகள் திருபதிகாரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது ஆண்டு பராமரிப்பு பணிகள் **31.01.2023** உடன் முடிவடைய உள்ளது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்த ஆவணத்தில் ஒப்பந்ததாரர் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக மேற்கொள்ளும் நிலையில் அவருக்கு ஒப்பந்தத்தை நகராட்சி மன்ற அனுமதியுடன் நீட்டிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனம் திருப்திகரமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதே நிறுவனம் மூலமாக மேலும் ஓராண்டிற்கு **(01.02.2023** முதல் **31.01.2024** வரை**)** அல்லது அரசால் வெளிகொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் அமர்த்த ஊதியம் நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் நியமிக்கும் காலம் வரை பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கடந்த ஆண்டு மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாக ரூ.**105.84**இலட்சத்தில் பணியை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 348/2022/இ1)**

**தீர்மானம் எண். : 446, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள **100** துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.KDIS,No.28369/J3/2018 நாள்.**04.12.2018** வாயிலாக மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் அடிப்படையில் 100 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்துக்கொள்ள P.M.Infra, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மானம் எண்.**38**, நாள்:**29.01.2019** வாயிலாக ஏற்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.02.2019** முதல் நாளது தேதிவரை பணி நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தற்போது பராமரிப்பு காலம் **31.01.2023**உடன் முடிவுறும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை மேலும் இரண்டு மாத காலத்திற்கு காலத்திற்கு **(01.02.2023** முதல் **31.03.2023** வரை**)** அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததராரர்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தராரர்கள் நியமிக்கும் காலம்வரை எது முன்னதாக நடைபெறுகின்றதோ அதுவரை நீட்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இரண்டு மாத காலத்திற்கு **(01.02.2023** முதல் **31.03.2023** வரை**)** அல்லது அரசு அளவுகோலின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்படும் வரை (எது முன்னதாக வருகின்றதோ அந்த காலம் வரை) ஏற்கனவே

அனுமதிக்கப்பட்ட ஊதியத் தொகை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.434/– (EPF, ESI நீங்கலாக) என்ற அடிப்படையில் நீட்டிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்களுக்கான ஒப்பந்த காலத்தை இரண்டு மாத காலத்திற்கு (01.02.2023 முதல் 31.03.2023 வரை) அல்லது அரசு அளவுகோலின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்படும் வரை (எது முன்னதாக வருகின்றதோ அந்த காலம் வரை) நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 10130/2022/எச்1)**

**தீர்மானம் எண். : 447, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்த ஏதுவாக 20 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் 20 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 129, நாள். 17.08.2022 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 29.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Kaliyamman Trading Corporation, Namakkal
2. Sri Akshaya Traders, Namakkal
3. Sri Varahi Chemicals, Namakkal

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.3இல் உள்ள Sri Varahi Chemicals, Namakkal நிறுவனத்தின் மூலமாக சுண்ணாம்பு தூளிற்கான விலைப்புள்ளிகள் குறிப்பிடப்படவில்லை. எனவே ஒப்புந்தப்புள்ளி முழுமையாக இல்லாலதால், அதனை இரத்து செய்து மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதங்கள் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கப்பட்டுள்ளது.

1. Sri Kaliyamman Trading Corporation, Namakkal – ரூ. 9,72,000/–
2. Sri Akshaya Traders, Namakkal – ரூ. 9,80,000/–

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பிட்டைவிட குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளிகளைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த Sri Kaliyamman Trading Corporation, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த Sri Kaliyamman Trading Corporation, Namakkal நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3752/2022/இ1)**

**தீர்மானம் எண். : 448, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட தும்மங்குறிச்சி கிராமம் சர்வே எண். 113/2A1A2, 2A1B3 இல் உள்ள 1.1625 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு. V.குணசேகரன் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/DRM1G5KE/5265/2022/TCP, நாள்.24.11.2022–ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள், குடிநீர் வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை 21.11.2022ஆம் தேதிய தானபத்திரம் எண்.5335இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,00,000/–ஐ மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/DRM1G5KE/5265/2022/TCP, நாள்.24.11.2022இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.236/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.

2,00,000/–, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை ரூ.1,17,000/– மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சியில் செலுத்தியுள்ளார்.

ஆகவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் தெருவிளக்கு வசதி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளதால், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண். 7143/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 449, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட சின்னமுதலைப்பட்டி கிராமம் சர்வே எண். 59/5A, 5C1 இல் 2.20 ½ ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு. A. மதன் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். 160/2022/நாமா, நாள்.25.11.2022–ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை 03.10.2022 ஆம் தேதிய தானபத்திரம் எண்.5205இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/–யும் மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,20,000/–யும் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 160/2022/நாமா, நாள்.25.11.2022இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(நாமா) எண்.244/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் குடிநீர் வசதி செய்வதற்கான தொகை ரூ.2,30,000/–, தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,20,000/–, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை ரூ.2,20,500/– மற்றும் மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சியில் செலுத்தியுள்ளார். ஆகவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை, தெருவிளக்கு வசதி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளதால், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண். 5633 /2022/எப்1)**

**தீர்மானம் எண். : 450, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட தும்மங்குறிச்சி கிராமம் சர்வே எண். 29/2B இல் 0.65 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிகோரி திரு. S. ராஜ்குமார் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/CSZ5MJVI/5092/2022/TCP, நாள்.21.11.2022–ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள், குடிநீர் வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை 14.11.2022 ஆம் தேதிய தானபத்திரம் எண்.5242இன் மூலம் நகராட்சிக்கு தானம்

செய்யப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,40,000/—ஐ மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/CSZ5MJVI/5092/2022/TCP, நாள்.21.11.2022இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.230/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,40,000/–, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை ரூ.65,000/– மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சியில் செலுத்தியுள்ளார். ஆகவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் தெருவிளக்கு வசதி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளதால், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண். 7159/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 451, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்தின் முகப்பில் பொதுமக்கள் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த திறந்த வெளியில் அமர்ந்தும், கூட்டம் அதிகமாக உள்ள நேரங்களில் வெயிலில் வெளியே நின்று காத்திருந்து கட்டணம் செலுத்தி வருகின்றனர். எனவே பொதுமக்கள் வரி செலுத்த வரும் போது உரிய இருக்கையில் அமர்ந்து வரி செலுத்த ஏதுவாக அறை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே கட்டிடத்தின் வெளிப்புறத்தின் முகப்பில் 20.50 மீ நீளத்திற்கும் 9.10 மீ உயரத்திற்கும் அலுவலமினயம் பிரேம் மற்றும் imported tint glass பொருத்தி அறை ஒன்றை உருவாக்கும் வகையில் தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 17.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்._ **(ந.க.எண். 7938/2022/இ1)**

**தீர்மானம் எண். : 452, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சி பேருந்து நிலையத்தில் மூன்று கழிவறைகள் உள்ளது. இவற்றின் ஆழ்துளை கிணற்றில் கம்பரசர் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கம்பரசர் பொருத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், அடிக்கடி பழுது ஏற்பட்டு விடுகிறது. எனவே மேற்படி மூன்று கம்பரசரை மாற்றி புது கம்பர்சர்கள் மோட்டார் பொருத்த வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7939/2022/இ1)**

**தீர்மானம் எண். : 453, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 கோட்டை காலனி பகுதியில் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றில் கீரில் அமைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியதும், திறந்தவெளி கிணற்றில் மற்றும் அப்பகுதியில் ஆழ்துளை கிணற்றில் பழுதடைந்துள்ள நிலையில் உள்ள மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைத்து தண்ணீர் விநியோக செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7950/2022/இ1)**

**தீர்மானம் எண். : 454, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 34 மற்றும் 35இல் உள்ள கூட்டுறவு காலனி, அழகு நகர் பகுதிகளை இணைக்கும் விதத்தில் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கல்லூரியின் தென்புற பகுதியில் உள்ள சாலை பொதுமக்களால் பயன்படுத்தி வரும் முக்கிய இணைப்பு சாலையாக உள்ளது. தற்போது இப்பகுதி பொதுமக்கள் மற்றும் மோகனூர் சாலை, திருச்சி சாலை, காந்திநகர் பகுதிகளுக்கு செல்ல அனைத்து பொது மக்களும் இச்சாலையை பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே, நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு.டி, பிளாக்.24, நகரளவை எண். 26இல் உள்ள நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கல்லூரி நிலத்திலிருந்து 1582.00 சதுர மீட்டர் மற்றும் கொண்டிசெட்டிப்பட்டி கிராம சர்வே எண். 40இல் உள்ள 582.00 சதுர மீட்டர் சேர்த்து மொத்தம் 2164.00 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள இடத்தினை நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து வழங்குவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்ய கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 6093/2020/எப்1)**

**தீர்மானம் எண். : 455, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**